# குழித்துறை நகராட்சி

**குழித்துறை நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 31-10-2023 செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது. தாங்கள் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை வி.எல்.சி. மைதானத்தை சுற்றிலும் பக்கச் சுவர் கட்ட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.659 தீர்மானிக்கப்பட்டது.

5-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.S. ஆட்லின் கெனில் கொண்டு வரும் தீர்மானங்கள்

1) ஆர்.சி.தெருவில் அமைந்துள்ள குடிநீர் தொட்டியின் பக்கச்சுவர் பழுதடைந்துள்ளதால் சுற்றுசுவர் கட்ட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.660 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) ஆர்.சி.தெருவில் குடிநீர் தொட்டி அமைந்துள்ள இடத்தில் அலங்கார கற்கள் பதிக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.660 (2) தீர்மானிக்கப்பட்டது.

9-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.பி. ரவி கொண்டு வரும் தீர்மானங்கள்

1) குழித்துறையில் பஸ் நிலையம் அமைப்பதற்காக குழித்துறை நகராட்சி எடுத்து வரும் நடவடிக்கையை துரிதப்படுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.661 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) விளவங்கோடு ஆற்றுக்கடவு செல்லும் சாலையில் சாணிவிளை மாடன்கோவில் அருகாமையிலிருந்து திரு. பால்ராஜ் அவர்கள் வீட்டின் அருகாமை வரை வடிகால் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.661 (2) தீர்மானிக்கப்பட்டது.

14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.அ. லில்லி புஷ்பம் கொண்டு வரும் தீர்மானம்

1) மின்கம்பம் - 14-வது வார்டில் ம.சி.க தொடக்கப்பள்ளி முன் நிற்கும் மின் தூண் போக்குவரத்துக்கு இடையூறாக நிற்கின்றது. அந்த தூண் பள்ளியின் முன்கேட் பக்கம் உள்ளது. அது பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது. அதனால் அதை மாற்றி தரும்படி மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.662 (1)

2) Stay கம்பி - 14-வது வார்டில் வடக்குதெருவில் கான்வென்ட் முன்பும் வாத்தியாகுடி போகும் ரோட்டில் செல்லும் பாதையில் வண்டி செல்லும் போது அந்த Stay கம்பி கட்டி இடையூறாக உள்ளது. அதனால் அதை மாற்றி தரும்படி மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.662 (2) தீர்மானிக்கப்பட்டது.

16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.K. இரத்தினமணி கொண்டு வரும் தீர்மானம்

1) வார்டு எண்.16-ல் சாலையை ஒட்,டி கொல்லக்குளத்தின் பக்க சுவர் பழுதடைந்து உள்ளதால் அதை உடனே சரி செய்ய வேண்டும், இல்லையேல் கொடுங்குளம் சாலை பாதிக்கப்பட கூடிய சூழ்நிலை உருவாகும். மேலும் மழைகாலங்களில் கொடுங்குளம் சாலை வழியே பாய்ந்து செல்லும் அவரிமிதமான தண்ணீர் கொல்லகுளத்தில் செவ்வதை தடுக்கும் வகையில் ஒரு மீட்டர் அளவுக்கு உயரமாக பக்க சுவர் எழுப்ப மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.663 தீர்மானிக்கப்பட்டது.

18-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.S.P. ஜலிலா ராணி கொண்டு வரும் தீர்மானம்

1) B.Ed. College முன்பகுதியில் செல்லும் சாலை (அழகன்விளை, குழிச்சாணி விளையில்) கடைசியில் காணும் மின்கம்பத்தில் தெருவிளக்கு போட்டு தரும்படி மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.664 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) அழகன்விளையில் மின்கம்பத்தில் தெருவிளக்கு (திரு. ரெவி) வீட்டு முன்போட்டு தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.664 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) சிங்கிளேயர் தெரு முனையில் காணும் மண் சக்தி, கற்கள், ரோடு சீரமைப்பு செய்து தர மன்றம் தீர்மானிக்க பலமுறை கேட்டவைகளில் ஒன்று.

மன்றத்தீர்மான எண்.664 (3) தீர்மானிக்கப்பட்டது.

4) B.Ed. College முன் உள்ள சாலையில் காணும் மண்புதர்கள் (கூட்டி வைத்தவை) அகற்ற மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.664 (4) தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.1

குழித்துறை நகரம் புல எண்.C5/95-ல் உள்ள ஆக்கிரமிப்பு அப்புறப்படுத்தாதது தொடர்பாக திரு.T. தேவராஜ் என்பவரால் மதுரை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.(MD) 25265 of 2022-ற்கு எதிர் வாதுரை தாக்கல் தயார் செய்யப்பட்ட வகைக்கு நகராட்சி வழக்கறிஞர் திரு.D ஷாஜிகுமார் அவர்களுக்கு ரூ.5000/- நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.4243/2022/ந.அ,ஆ.

மன்றத்தீர்மான எண்.665 தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பணிகளுக்கு தேவையான பொருட்கள் வாங்கிட நகர்மன்றத்தீர்மானம் எண்.623, நாள் 29-09-2023-ன்படி தீர்மானிக்கப்பட்டதின்பேரில் தேவையான பொருட்களை வாங்கிட 11-10-2023-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1) ரேவதி டிரேடர்ஸ்
   (i) பிளிச்சிங் பவுடர் 1 கிலோ - ரூ.42/-
   (ii) சுண்ணாம்பு தூள் 1 கிலோ - ரூ.9/-
2) G.K.K. டிரேடர்ஸ்
   (i) பிளிச்சிங் பவுடர் 1 கிலோ - ரூ.43/-
   (ii) சுண்ணாம்பு தூள் 1 கிலோ - ரூ.9.50/-

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் கண்ட ரேவதி டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாகவுள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வினியோக உத்தரவு வழங்கப்பட்டது மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3655/2021/H1.

மன்றத்தீர்மான எண்.666 தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.3

குழித்துறை நகராட்சியில் தற்போது பெய்து வரும் பருவமழைகாரணமாக பெருங்குளம் முதல் கல்பாலத்தடி இசக்கியம்மன் கோயில் சாலையில் உடைப்பு ஏற்பட்டு பொதுமக்கள் பயன்படுத்த முடியாமல் உள்ளது. மேலும் அங்குள்ள சானல் வழியாக வரும் மழைநீர் அருகாமையிலுள்ள விவசாய பூமிகளுக்கு சென்று சேதமடைகிறது. எனவே மேற்கண்ட இடத்தில் போர்கால அடிப்படையில் தடுப்பு சுவர் அமைக்க வேண்டியது அவசியமாகும். உத்தேச செலவினத்தொகை ரூ.9,80,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) பணியின் மதிப்பீடு தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2747/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.667 தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட நகர புல எண்.A3-64-ல் உள்ள 1260 ச.மீ. பரப்பளவு உள்ள இடம் விவசாய பகுதியிலும் A3-69/4-ல் உள்ள 271 ச.மீ. பரப்பளவு உள்ள இடம் வணிகப்பகுதியிலும் உள்ளதினை நிறுவனப்பகுதியாக நில பயன்மாற்றம் கோரிய Dr. ஷீபா ஜெயலால் குழித்துறை என்பவரது விண்ணப்பத்தின் பேரில் மேற்படி நில பயன்மாற்றம் தொடர்பாக, பொதுமக்களுக்கு ஏதேனும் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் இருப்பின் எழுத்து பூர்வமாக 30 தினங்களுக்குள் இந்நகராட்சிக்கு தெரியப்படுத்துமாறு அறிவித்து Afternoon English daily மற்றும் தினத்தந்தி நாளிதழில் 16-06-2022 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. 30 தினங்கள் கடந்த நிலையில் இந்நாள் வரை எழுத்து பூர்வமாக ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதும் பெறப்படவில்லை. எனவே ஆட்சேபனைகள் ஏதும் இல்லை எனக்கருதி மேல் நடவடிக்கைக்காக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாகர்கோவில் அனுப்பிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1233/2022/ந.அ.ஆ.

மன்றத்தீர்மான எண்.668 தீர்மானிக்கப்பட்டது.

ஒப்பம்/-திரு.பொன்.ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி

.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.